மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவிகளில் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு இல்லாமல், ஊராட்சித் தேர்தல்களை நடத்தியதற்கு எதிராக அரசு மீது, டெல்லி உச்ச நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவும், ஒரு உரிமையியல் மேல் முறையீடும் போடப்பட்டுள்ளது.

(ஆ) ஆம்.

ஆண்டிப்பட்டி அரசினர் மருந்தகம்.

152—(*வினா எண். 2000) திரு. இரா. முத்தையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசினர் மருந்தகத்தை மருத்துவமனையாக உயர்த்தும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தரம் உயர்த்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியில் உள்ள அரசினர் மருந்தகத்தை 24 படுக்கைகள் கொண்ட பொதுப்பிரிவு, 8 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பிரிவுடன், அறுவை அரங்கு, எக்ஸ்ரே பிரிவு மற்றும் மருத்துவர்கள் குடியிருப்பு இல்லங்கள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசாணை (நிலை) எண். 1110, சுகாதாரம், நாள் 9—6—1986-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

கோவை மருத்துவமனையில் தீப்புண் தீவிர சிகிச்சைப் பிரிவு.

153—(*வினா எண். 6654) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீப்புண் சிகிச்சைக்கு தீவிர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. ஜு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இம்மாதிரி தீப்புண் கேஸ்கள் ஏராளமாக ஆஸ்பத்திரி களுக்கு வந்த வண்ணம் இருக்கின்றன. எப்படி மருத்துவமனை களில் கடுமையான வியாதிகளுக்கு விசேஷமான பிரிவை ஏற் படுத்தி சிகிச்சை அளிக்கப்படுகிறதோ அதுபோல் தீப்புண் கேஸ்களுக்கும் விசேஷப் பிரிவை ஏற்படுத்தி சிகிச்சையளிக்க வேண்டும். காரணம் தீப்புண் என்று வருகின்ற கேஸ்களில் பலர் இறந்துவிடுகின்றனர். அது மட்டுமல்லாமல் குடிசை களில் தீ பிடிக்கின்றபோது ஒட்டுமொத்தமாக பலர் தீயில் சிக்கி தீக்காயத்துடன் சிகிச்சைக்காக வருகின்றார்கள். ஆகவே, இதற்காக தனியாக விசேஷப் பிரிவு ஏற்படுத்துவது என்பது அத்தியாவசியமானதும், நியாயமானதும் ஆகும். ஆகவே, இதுபற்றி அரசு பரிசிலித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் தீப்புண் வைத்தியத்திற்கு என்று தனிப் பிரிவு இல்லை. தீப்புண்ணால் பாதிக்கப்பட்டு வரு கின்றவர்களுக்கு வைத்தியம் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை மனதிலே கொண்டு நிதி ஆதாரத்தை யும் மனதிலே கொண்டு அரசு பரிசீலிக்கும்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, தென் இந்தியாவிலேயே கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில்தான் தீப்புண்ணுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. அங்குள்ள வசதி தமிழகத்தில் உள்ள வேறு எந்த அரசு மருத்துவமனைகளிலும் கிடையாது. அங்கே யுள்ள வசதி அளவிற்கு தமிழகத்திலே உள்ள அனைத்து அர சினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் ஏற்படுத்து வதுடன், பிளாஸ்டிக் சர்ஜரி டிப்பார்ட்மென்ட் மூலம் சிகிச்சை அளிக்கும் முறையை விஸ்தரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையிலே தீப்புண்ணுக்கான இன் டென்சிவ் கேர் யூனிட், இ.சி.ஜி., பிளட் பாங்க், லேபரேட்டரி போன்ற வசதிகள் இல்லை. அதற்கான வசதியும் ஏற்படுத் தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தைக் கொஞ்சம் திருத்திக்கொள்ள வேண்டுகிறேன். ஏற் கெனவே 4 இடங்களில் தீப்புண்ணுக்கான தனிப் பிரிவுகள்

இருக்கின்றன. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, சென்னை கீழ்ப் பாக்கம் அரசு மருத்துவமனை, சென்னை மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய 4 இடங்களிலும் தீப்புண்ணுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டில் இருக்கின்ற அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அன்றாடம் தீப்புண்ணினால் பாதிக் கப்பட்டவர்கள் இறக்கிறார்கள். நேற்று முன்தினம் கூட செல்வி என்பவர் தீப்புண் ஏற்பட்டு அங்கே சேர்த்த உடன் மருத்துவ வசதியில்லாமல் இறந்துவிட்டார்கள். மேலும் அங்கே தீப்புண்ணால் பாதிக்கப்பட்டு ஆண், பெண் இறக்காத நாளே இல்லை. ஆகவே, அங்கே தீப்புண்ணுக்கு தனியாக தீவிர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தனியாக தீப்புண்ணுக்கு சிகிச்சை அளிக்க பிரிவு இல்லை. ஆனால் அரசு மருத்துவமனைகளில் தீப்புண் பட்டவர்களுக்கு அல்லது காயம் பட்டவர்களுக்கு அத் தகைய வசதி அளிக்கப்படுகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு இதுபோன்று தீப்புண்பட்ட நோயாளிகளும், மற்ற தொழிற்சாலைகளிலிருந்து தீ விபத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்ற நோயாளிகளும் அதிகரித்து வருகின்றார்கள். இந் நிலையில் அங்கேயுள்ள படுக்கை வசதி அவசியம் கூடுதலாகத் தேவை என்கிற நிலையும் இருக்கிறது. ஆகவே, அங்கே கூடுதல் படுக்கை வசதியை ஏற்படுத்த அரசு ஏதேனும் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா என்று அறிய விரு கிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இல்லை என்று சொன்னேன். அங்கே இருக்கும் நிலைமைகளை உத்தேசித்து, நிதிநிலையையும் சேர்த்து ஆராய்ந்து அதுபற்றி அரசு முடிவெடுக்கும்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சிவகாசி பெருநகரிலே பட்டாசுத் தொழிலும் தீப்பெட்டித் தொழிலும் அதிகமாக வளர்ந்து வருகின்றன. அடிக்கடி தீ விபத்துகள் ஏற்படுகின்றன. சிவகாசி அரசு பொது மருத்துவமனையில் தீப்புண் சிகிச்சைக்காகத் தனிப் பிரிவு அமைக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, சிவகாசி பட்டாசு சிவகாசியிலேயே வெடிப்பதில்லை. மற்ற இடங்களில், தமிழ்நாடு முழுவதும் வெடிக்கப்படுகிறது.